MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# மனித வாழ்வியலும் பண்பாடும்

1. பா. மஞ்சுஸ்ரீ,
இளங்கலை இரண்டாம் ஆண்டு வரலாறு,
கொன்சாகா கலை & அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம், கிருஷ்ணகிரி.

2. பேரா.ச.பூபாலன்,
உதவிப் பேராசிரியர் & வரலாற்றுத் துறை தலைவர்,
கொன்சாகா கலை & அறிவியல் மகளிர் கல்லூரி,காத்தாம்பள்ளம்,கிருஷ்ணகிரி.

DOI 10.5281/zenodo.18517744.

**Abstract :**

**Culture is the fundamental force that integrates and shapes all aspects of human life. It can be said that culture originated from the time when humans, transitioning from merely surviving in the natural environment, developed an organized way of life within a social structure. The word "culture" has a broader meaning, encompassing not only physical development but also the intellectual, mental, and social development of humankind. This word, called CULTURE in English, is believed to have originated from the Latin word COLERE. COLERE means to cultivate, to nurture, and to refine. Based on this, culture can be defined as the continuous process of development of the human mind and society. Culture is not static; it is dynamic and constantly changes according to time, circumstances, and social transformations. Even within the same society, customs, beliefs, and ways of life change over time. However, culture does not completely disappear; instead, it adopts new forms and continues to evolve. This study serves as an important research tool to understand society and protect its identity.**

**KeyWords : Culture – Colere – Society – Human Life.**

## முன்னுரை

மனித வாழ்க்கையின் அனைத்துத் தருணங்களையும் ஒருங்கிணைத்து வடிவமைக்கும் அடிப்படை சக்தியாக விளங்குவது பண்பாடு ஆகும். மனிதன் இயற்கைச்சுழலில் உயிர் வாழும் நிலையிலிருந்து, சமூக அமைப்பில் ஒழுங்கமைந்த வாழ்க்கை முறையை உருவாக்கிய காலப்பகுதியிலிருந்தே பண்பாடு தோற்றம் பெற்றது எனலாம் . “**பண்பாடு**”என்று சொல்லுக்கு மனிதனின் உடல் வளர்ச்சியை விட அவனது மன அறிவு மற்றும் சமூக வளர்ச்சியை குறிக்கும் விரிவான பொருள் உள்ளது .ஆங்கிலத்தில் CULTURE எனப்படும் இந்தச் சொல் லத்தின் மொழியின் COLERE என்ற சொல்லிலிருந்து உருவானதாக கருதப்படுகிறது . COLERE என்பது பயிரிடுதல் , வளர்த்தல், பண்படுத்துதல் என்ற பொருள்களை உடையதாகும் . இதன் அடிப்படையில் மனித மனமும் சமூகமும் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து வரும் செயல்முறையே பண்பாடு எனக் கூறலாம். பண்பாடு என்பது நிலையான ஒன்றல்ல ,அது காலம் சூழல் மற்றும் சமூக மாற்றங்களுக்கேற்ப மாறிக் கொண்டே இ ருக்கும் இயங்கும் தன்மையைக் கொண்டது.ஒரே சமூகத்தில் கூட காலப்போக்கில் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்வியல் முறைகள் மாற்றமடைகின்றன. இருப்பினும், பண்பாடு முழுமையாக அழிந்து போவதில்லை மாறாக, புதிய வடிவங்களை ஏற்று தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்றது. இவ்வாய்வு சமூகத்தைப் புரிந்து கொள்ளவும், அதன் அடையாளங்களை பாதுகாக்கவும் உதவும் ஒரு முக்கியமான ஆய்வுக் கருவியாகவும் திகழ்கிறது.

## பண்பாட்டு ஆய்வுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

பண்பாடு என்பது மனித சமூகத்தின் வளர்ச்சியோடு இணைந்தே உருவாகி வந்துள்ளன . தொடக்ககால மனித சமூகங்களில் வாழ்க்கை முறைகள் , உணவு சேகரிப்பு ,வேட்டையாடல், குழு



http://Creativecommons.org//license/by/4.0/.

வாழ்க்கை, நம்பிக்கைகள் போன்றவை பண்பாட்டின் ஆரம்ப வடிவங்களாக இருந்தன . இவை காலப்போக்கில் நிலைபெற்று, சமூக மரபுகளாக மாற்றம் பெற்றன . அறிவியல் முறையிலான பண்பாட்டு ஆய்வுகள் 19ஆம் நூற்றாண்டில் மேற்கத்திய உலகில் தொடங்கின . மனிதவியல் (ANTHROPOLOGY) சமூகவியல் (SOCIOLOGY ) போன்ற துறைகளின் வளர்ச்சியுடன் இணைந்து பண்பாட்டை ஆய்வு செய்யும் போக்கு வலுப்பெற்றது . **எட்வர்ட் பி . டைலர்** போன்ற அறிஞர்கள் பண்பாட்டை ஒரு முழுமையான சமூக அமைப்பாகக் கருதி வரையறுத்தனர்.

மானிடவியல் துறையின் தந்தை என்று அழைக்கப்படும் எட்வர்ட் பி . டைலர் (Edward B. Tylor), பண்பாட்டை ஒரு "முழுமையான தொகுப்பாக" (Complex whole) பார்த்த மிக முக்கியமான அறிஞர் ஆவார்.

அவர் 1871-ஆம் ஆண்டு எழுதிய "Primitive Culture" என்ற நூலில் பண்பாட்டிற்கு வழங்கிய வரையறை இன்றும் மானிடவியலில் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

டைலரின் பண்பாட்டு வரையறை

## அவரது கூற்றுப்படி:

"பண்பாடு அல்லது நாகரிகம் என்பது ஒரு சமூகத்தின் உறுப்பினராக மனிதன் கற் றுக்கொண்ட அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் மற்றும் பிற திறன்களையும் பழக்கவழக்கங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தொகுப்பாகும்."

## இந்த வரையறையின் முக்கிய அம்சங்கள்:

**கற்றறியப்பட்ட பண்பு** : பண்பாடு என்பது பிறப்பால் வருவதல்ல ; ஒரு சமூகத்தில் வாழ்வதன் மூலம் மனிதன் கற்றுக் கொள்வது (Acquired) என்பதை டைலர் வலியுறுத்தினார்.

**சமூக அமைப்பு**: தனிமனித ஒழுக்கம் என்பதைத் தாண்டி, சமூகம் சார்ந்த ஒட்டுமொத்த வாழ்க்கை முறையையே அவர் பண்பாடு என்று அழைத்தார்.

**அனைத்தையும் உள்ளடக்கியது** : சட்டம், கலை, நம்பிக்கை என ஒ வ்வொன்றையும் தனித்தனியாகப் பார்க்காமல், இவை அனைத்தும் இணைந்த ஒரு அமைப்பாகவே பண்பாட்டை அவர் கருதினார்.

இதன் காரணமாகவே , பண்பாட்டை ஒரு அறிவியல் பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்திய முதல் அறிஞராக அவர் போற்றப்படுகிறார்.

இதன் மூலம் பண்பாடு என்பது தனிப்பட்ட பழக்கவழக்க ம் அல்ல, மாறாக சமூகத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் அமைப்பு என்பதை ஆய்வுகள் நிரூபித்தன . இந்தியச்சூழலில் பண்பாட்டு ஆய்வுகள் மிகப்பழமையான மரபை கொண்டுள்ளன . வேத காலம் முதல் சங்க காலம் வரை உள்ள இலக்கியங்கள் சமூக வாழ்க்கை , மத நம்பிக்கைகள் , கலை மற்றும் சடங்குகளைப் பதிவு செய்துள்ளன.

குறிப்பாக, சங்க இலக்கியங்களில் காணப்படும் அக ,புற வாழ்க்கை போன்றவை தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டை அறிய முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன . இதன் மூலம் இலக்கியமே பண்பாட்டு ஆய்வுகளின் அடிப்படைய ஆதாரமாக இருந்தது என்பதை அறியலாம் . தமிழ் சமூகத்தில் நாட்டுப்புறத் திருவிழாக்கள் , சடங்குகள், கலை வடிவங்கள் போன்றவை பண்பாட்டின் உயிர்ப்பான கூறுகளாக உள்ளன . இவை **கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், வாய்மொழி மரபுகள்** ஆகியவற்றின் வழியாக பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன . காலனிய காலத்தில் **மேற்கத்திய கல்வி**


http://Creativecommons.org//license/by/4.0/.

**முறை** அறிமுகமானதன் மூலம் பண்பாட்டை ஆய்வு செய்வது ஒரு தனித்துறையாக வளர்ச்சி பெற்றது. நவீன காலத்தில் உலகமயமாதல் , நகரமயமாதல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக பண்பாட்டு ஆய்வுகள் புதிய பரிமாணங்களை அடைந்துள்ளன .பாரம்பரிய பண்பாடுகள் மாற்றங்களை எதிர்கொண்டு வரும் நிலையில் அவற்றை பதிவு செய்வது பாதுகாப்பது முக்கியமானதாக மாறியுள்ளது.

## மனித வாழ்க்கையும் பண்பாடும்

மனித வாழ்க்கையும் பண்பாடும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்தவை ஆகும். மனிதன் பிறந்த தருணத்திலிருந்தே பண்பாட்டு சூழலில் வளர்கிறான். அவன் பேசும் மொழி ,பழகும் நடைமுறைகள், உணவு பழக்கங்கள் ,உடை அணிவது, நம்பிக்கைகள் மற்றும் சமூக ஒழுக்கங்கள் ஆகிய அனைத்தும் அவன் வாழும் சமூகத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கின்றன.மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டமும் **பிறப்பு,வளர்ச்சி, கல்வி, திருமணம், இறப்பு** என அனைத்தும் குறிப்பிட்ட பண்பாட்டு நடைமுறைகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. சமூகத்தின் மதிப்பீடுகள் , மரபுகள் மற்றும் ஒழுக்க கோட்பாடுகள் மனிதனின் சிந்தனை, நடத்தை மற்றும் வாழ்வியல் முறைகளில் பண்பாடு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.இவ்வாறு,பண்பாடு மனித வாழ் க்கைக்கு ஒரு ஒழுங்கையும் அடையாளத்தையும் அளிக்கிறது. அதே நேரத்தில் , மனிதர்களின் செயல்பாடுகள் மற்றும் அனுபவங்களின் மூலம் பண்பாடும் தொடர்ந்து உருவாக்கப்பட்டு மாற்றம் அடைகிறது . மனித வாழ்க்கையும் பண்பாடும் பரஸ்பரத் தொடர்புடன் தொடர்ந்து வளர்ந்து வருவதால் ,பண்பாடு மனித வாழ்க்கையின் உயிர்ப்பான வெளிப்பாடாகவே திகழ்கிறது.

## சமூக அமைப்புகளும் பண்பாட்டு வடிவங்களும்

குடும்பம்,சமூகம், சமய நிறுவல்கள் ,கல்வி அமைப்புகள் ,தொழில் மற்றும் அரசியல் அமைப்புகள் போன்றவை மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் முக்கிய சமூக கட்டமைப்புகளாக உள்ளன. இவ்வமைப்புகள் மனிதனின் நடத்தை ,சிந்தனை மற்றும் வாழ்வியல் முறைகளை வழி நடத்துவதோடு சமூகத்தில் நிலவும் பண்பாட்டு வடிவங்களையும் உருவாக்குகின்றன.

**குடும்பம்** என்பது மனிதன் முதன்முதலில் பண்பாட்டை அறியும் இடமாகும். மனித வரலாற்றில் தோன்றிய குடும்ப வகைகளை **லூயி ஹொன்றி மார்கன்** வரிசைப்படுத்தினார். குடும்பத்தின் வழியே **மொழி,ஒழுக்கம்,மரியாதை, பாரம்பரியம்** போன்ற பண்பாட்டு மதிப்பீடுகள் அடுத்த தலைமுறைகளுக்குப் பரிமாற்றப்படுகின்றன.அதேபோல் சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்த விழாக்கள்,சடங்குகள், திருவிழாக்கள் மற்றும் கூட்டுச் செயல்பாடுகள் வழியாக பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. இவை சமூக ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன.

**சமயம்** என்பது பண்பாட்டின் வடிவமைப்பில் முக்கிய ப ங்காற்றுகின்றன.சமய நம்பிக்கைகள்,வழிபாட்டு முறைகள் , சடங்குகள் ஆகியவை பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன.

**கல்வி** அமைப்புகள் பண்பாட்டை அறிவாக மாற்றி அதை பாதுகாக்கவும் பரப்பவும் உதவுகின்றன.காலப்போக்கில் சமூக அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் பண்பாட்டு வடிவங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

## மொழியின் பண்பாட்டு அடையாளம்


http://Creativecommons.org//license/by/4.0/.

மொழி என்பது மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் பேசவும் கருத்துக்களை பகிரவும் பயன்படுத்தும் கருவி மட்டுமல்ல . அது ஒரு சமூகத்தின் பண்பாட்டையும் அடையாளத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான கருவியாகும் . மொழியின் விரிவான பயன்பாடு மனிதர்களின் சமூகவியல் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. **உதாரணமாக**,ஒரு மொழியில் இருக்கும் சொற்களின் பயன்பாடு மற்றும் அமைப்பு அந்த சமூகத்தின் பழக்கவழக்கங்களை , மத நம்பிக்கைகளை, குடும்ப மற்றும் சமூக உறவுகளை பிரதிபலிக்கலாம் . தமிழில் உள்ள பழமொழிகள் , வார்த்தை பொருள் மாற்றங்கள் மற்றும் மொழி வழியாக உருவாகும் கலாச்சார மரபுகள் போன்றவை பாரம்பரியத்தின் தூணாகத் தோன்றுகிறது . இன்றைய காலத்தில் உலகமயமாதல் காரணமாக பல மொழிகள் மாற்றங்களை சந்திக்கின்றன .ஆனால் எந்த மாற்றங்கள் வந்தாலும் மொழி தனது பண்பாட்டு அடையாளத்தை முழுமையாக இழக்காது .எனவே **மொழியை பாதுகாப்பது என்பது பண்பாட்டை பாதுகாப்பதற்கு சமமானது**.

## இலக்கியத்தில் பண்பாட்டு வெளிப்பாடுகள்

**இலக்கியம்** என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் பண்பாட்டுச் சூ ழலைப் புரிந்து கொள்ள உதவும் முக்கிய ஆதாரமாக அமைகிறது . தமிழ் இலக்கியத்தில் சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை பண்பாட்டு வெளிப்பாடுகள் தெளிவாக காணப்படுகின்றன . சங்க பாடல்களில் காணப்படும் அகம் - புறம் வகைப்பாடு, திணை அடிப்படையிலான வாழ்க்கை முறை, உறவியல் அமைப்புகள், போர் முறை , வாழ்வாதார நடைமுறைகள் போன்றவை அக்கால சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன . அதேபோல் பக்தி இலக்கியங்களில் மத நம்பிக்கை , சமய சடங்குகள் மற்றும் ஆன்மீக வாழ்க்கை முக்கியமான பண்பாட்டுக் கூறுகளாக இலக்கிய வடிவம் பெற்றுள்ளன. நாட்டுப்புற இல க்கியங்கள் பாடல்கள் , கதைகள், பழமொழிகள், புராண கதைகள் பண்பாட்டு வெளிப்பாடுகளை மிகவும் இயல்பாகவும் உயிரோட்டமாகவும் வெளிப்படுத்துகின்றன . இவ்வகை இலக்கியங்களில் மக்களின் உணர்வுகள் ,சமூக நம்பிக்கைகள் ,வாழ்வியல் அனுபவங்கள் மற்றும் மரபுகள் வெளிப்படையாக காணப்படுகின்ற ன. இதனால், நாட்டுப்புற இலக்கியம் சமூகத்தின் உண்மை பண்பாட்டை அறிய உதவும் முக்கிய ஆதாரமாக கருதப்படுகிறது . மேலும் நாவல்கள் , சிறுகதைகள் மற்றும் கவிதைகள் வழியாக பண்பாட்டின் மாற்றம் , முரண்பாடு மற்றும் தொடர்ச்சி ஆகியவை விமர்சனப் பார்வையுடன் வெளிப்படுகின்றன . இவ்வாறு இலக்கியம் காலத்தின் பண்பாட்டை பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல் , அதை விமர்சித்து மறுசீரமைக்கும் சக்தியையும் கொண்டதாக விளங்குகிறது.

## கலை வடிவங்களும் பண்பாடும்

ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படும் கலை வடிவங்கள் அந்த சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை எடுத்துக்காட்டுகின்றன.

**இசை** மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் முதன்மையான கலை வடிவமாகும் . **உலகிற் சிறந்த இசை இந்திய இசையை . அதில் சிறந்தது தமிழிசை** .நாட்டுப்புற இசை , பக்தி இசை மற்றும் சாஸ்திர இசை ஆகியவை அந்தந்த சமூகத்தின் வாழ்க்கை முறை ,மத நம்பிக்கை மற்றும் பண்பாட்டுச் சூழலை பிரதிபலிக்கின்றன. பாடல்களின் சொற்கள் மற்றும் இசை அமைப்பு சமூகத்தின் உணர்வுகளையும் மரபுகளையும் வெளிப்படுத்துகின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

**நடனம்** உடல் அசைவுகளின் மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தும் கலை வடிவமாகும் . பரதநாட்டியம், கும்மி, கோலாட்டம் போன்ற நடனங்கள் சமூக நிகழ்வு கள், விழாக்கள் மற்றும் மரபுகளை பிரதிபலிக்கின்றன .இந் நடனங்களில் காணப்படும் உடை ,அசைவுகள் மற்றும் முக பாவங்கள் பண்பாட்டின் அடையாளங்களாக விளங்குகின்றன.

**நாடகம்** சமூக வாழ்க்கையை நேரடியாகக் காட்டும் கலை வடிவமாகும் . மனித உறவுகள் , சமூக பிரச்சனைகள்,பண்பாட்டு நம்பிக் கைகள் மற்றும் ஒழுக்க விதிகள் நாடகங்களில் வெளிப்படையாக காணப்படுகின்றன. இதன் மூலம் சமூகத்தின் உண்மை நிலையும் பண்பாட்டு மதிப்புகளும் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

**ஓவியம் மற்றும் சிற்பம்** சமூகத்தின் காட்சியளிக்கும் பண்பாட்டை வெளிப்படுத்தும் கலை வடிவங்களாகும். கோவில் ஓவியங்கள், சுவர் ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் அந்தக் காலகட்டத்தின் வாழ்க்கை முறை,கடவுள் வழிபாடு மற்றும் கலை நுணுக்கங்களை வெளிப்படுத்துகின்றன . இவ்வாறு கலை வடிவங்கள் அனைத்தும் பண்பாட்டின் உயிருள்ள வெளிப்பாடுகளாக விளங்குகின்றன.

## வாழ்வியலில் பண்பாட்டுக் கூறுகளின் தாக்கம்

மனிதன் பிறக்கும் தருணத்திலிருந்து இறக்கும் வரை அவன் வாழும் ஒவ்வொரு கட்டத்திலும் பண்பாட்டுக் கூறுகள் தாக்கம் செலுத்துகின்றன . திருவிழாக்கள்,சடங்குகள்,நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் மனித வாழ்க்கையின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன.

**திருவிழாக்கள்** சமூக ஒற்றுமையை வளர்க்கும் முக்கியமான பண்பாட்டு கூறுகளாக விளங்குகின்றன.மக்கள் ஒன்றாக கூடி கொண்டாடும் திருவிழாக்கள் மக்களிடையே உறவுப் பிணைப்பையும்,மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றன.

**சடங்குகள்** வாழ்க்கையின் முக்கிய கட்டங்களை குறிக்கின்றன . பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளில் நடைபெறும் சடங்குகள் மனிதர்களுக்கு பண்பாட்டை அடையாளத்தையும் சமூக ஒழுங்கையும் வழங்குகின்றன.

**நம்பிக்கைகள்** மனிதர்களின் எண்ணங்கள் மற்றும் செயல்களை வழிநடத்துகின்றன . சில நம்பிக்கை மனிதர்களுக்கு நம்பிக்கையையும் துணிச்சலையும் அளிக்கின்றன.

**மரபுகள்** என்பது தலைமுறை தலைமுறையாகப் பரிமாறப்படும் வாழ்க்கை முறைகளாகும் . அவை சமூகத்தின் தொடர்ச்சியையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்கின்றன . பழக்க வழக்கங்கள் மனிதர்களின் அன்றாட நடத்தையில் இயல்பாக இணைந்து காணப்படுகின்றன . இவ்வாறாக, பண்பாட்டுக் கூறுகள் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதோடு மட்டுமல்லாமல் , மனிதர்களின் அடையாளத்தை உருவாக்குகின்றன . எனவே, மனித வாழ்வியலை புரிந்து கொள்ள பண்பாட்டுக் கூறுகளின் தாக்கத்தை அறிதல் அவசியமாகும்.

## உலகமயமாதலும் பண்பாடும்

**உலகமயமாதல்** என்பது உலகின் பல நாடுகள் சமூகங்கள் மற்றும் மக்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் செயல்முறையாகும் . பொருளாதாரம், தொழில்நுட்பம்,ஊடகம் மற்றும் போக்குவரத்து வளர்ச்சி காரணமாக உலகமயமாதல் வேகமாக வளர்ந்துள்ளது.இதன் தாக்கம் மனிதர்களின் வாழ்க்கை முறையிலும் பண்பாட்டிலும் தெளிவாக காணப்படுகிறது . உலகமயமாதலால் பல்வேறு பண்பாடுகள் ஒருவருக்கொருவர் நெருக்கமாகும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது. **உணவு, உடை, இசை, மொழி, திரைப்படங்கள் போன்ற துறைகளில் பிறநாட்டு பண்பாடுகளி ன் தாக்கம்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

**அதிகரித்துள்ளது**.இதனால் பண்பாடுகளுக்கிடையே பரிமாற்றமும் கலப்பும் ஏற்படுகின்றன . சில நேரங்களில் இது பண்பாட்டை வளப்படுத்துவதாக அமைகிறது .அதே நேரத்தில் , உலகமயமாதல் பாரம்பரிய பண்பாடுகளுக்கு சவால்களையும் உருவாக்குகிறது . உள்ளூர் மொழிகள் ,நாட்டுப்புற கலைகள், மரபு வழக்கங்கள் போன்றவை புறக்கணிக்கப்படுவதற்கான அபாயம் உள்ளது . இளைஞர் தலைமுறையினர் உலகளாவிய பண்பாட்டுத் தாக்கங்களால் தங்கள் மரபுகளை மறக்கக்கூடும் . எனினும் உலகமயமாதலை முழுமையாக மறுப்பது சாத்தியமில்லை . உள்ளூர் மொழி , கலை, மரபுகள் ஆகியவற்றைக் காக்கும் முயற்சிகள் மூலம் பண்பாடும் உலகமயமாதலும் சமநிலையுடன் இணைந்து வளர முடியும்.

## தொழில்நுட்பத்தின் பண்பாட்டுத் தாக்கம்

**தொழில்நுட்பம்** மனித வாழ்க்கையில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு சக்தியாக விளங்குகிறது. **தகவல் தொடர்பு, போக்குவரத்து, ஊடகம் மற்றும் கணினி தொழில்நுட்ப வளர்ச்சி** போன்றவை மனிதர்களின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் பெரிதும் பாதித்துள்ளது. மனிதர்களின் பழக்க வழக்கங்கள் , தொடர்பு முறை மற்றும் சமூக உறவுகளில் தொழில்நுட்பத்தின் தாக்கம் தெளிவாகக் காண ப்படுகிறது.தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் ஒரு சிறிய கிராமமாக மாறியுள்ளது .**சமூக ஊடகங்கள் ,இணையம்** போன்றவை பல்வேறு பண்பாடுகளை மக்களுக்கிடையே பரப்புகின்றன. இதனால் பண்பாட்டு பரிமாற்றம் அதிகரிக்கிறது .உணவு, உடை, இசை, மொழி போன்ற துறைகளில் புதிய பண்பாட்டு மாற்றங்கள் உருவாகின்றன.அதே நேரத்தில் தொழில்நுட்பம் பாரம்பரிய பண்பாடுகளுக்கு சவாலாகவும் அமைகிறது .நேரடி மனித தொடர்புகள் குறைந்து, குடும்ப உறவுகள் பாதிக்கப்படுகின்றன . நாட்டுப்புறக் கலைகள் ,மரபு விளையாட்டுகள் மற்றும் வழக்கமான பழக்க வழக்கங்கள் மறைந்து போகும் அபாயம் உள்ளது .இளைஞர்கள் தொழில்நுட்பம் சார்ந்த வாழ்வியலுக்கு அதிகம் ஈர்க்கப்படுகின்றனர் . எனினும் தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்தினால் , பண்பாட்டைப் பாதுகாக்கவும் பரப்பவும் முடியும் .மரபு கலைகள், மொழி, இலக்கியங்கள் ஆகியவற்றை இணையம் வழியாக உலக அளவில் அறிமுகப்படுத்த முடிகிறது. ஆகையால், தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் பண்பாட்டின் பாதுகாப்பும் சமநிலையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## பண்பாட்டு மரபுகளின் பாதுகாப்பும் சவால்களும்

பண்பாட்டு மரபுகள் சமூக ஒற்றுமையையும் தொடர்ச்சியையும் உறுதிப்படுத்தும் பண்பாட்டு அடித்தளமாக செயல்படுகின்றன. நவீன கால சமூக மாற்றங்களின் சூழலில் பண்பாட்டு மாற்றங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றன . குறிப்பாக இளம் தலைமுறையினர் உலகளாவிய பண்பாட்டு தாக்கங்களுக்கு உட்பட்டு தமது மரபுகளிலிருந்து விலகும் போக்கு காணப்படுகிறது. அதே நேரத்தில், பண்பாட்டு மரபுகளை பாதுகாக்கும் முயற்சிகளும் சமூகத்தில் தீவிரமடைந்து வருகின்றன . கல்வி நிறுவனங்கள் , ஆய்வாளர்கள்,பண்பாட்டு அமைப்புகள் மற்றும் ஊடகங்கள் மரபுகளை **ஆவணப்படுத்துதல், மறு உயிர்ப்பு** மற்றும் **பரப்புதல்** போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றன . மேலும்,திருவிழாக்கள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் பண்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள் மரபுகளை சமூக வாழ்வுடன் இணைத்து பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன .எனவே, பண்பாட்டு மரபுகளை பாதுகாப்பது என்பது மாற்றங்களை மறுப்பது அல்ல , மாறாக சமூக மாற்றங்களோடு இணைந்து மரபுகளின் அடிப்படை மதிப்புகளை காக்கும் செயல்முறையாகும் . பாதுகாப்பும் மாற்றமும்


http://Creativecommons.org//license/by/4.0/.

சமநிலையில் முன்னெடுக்கப்படும் போதே பண்பாட்டு மரபுகள் எதிர்கால தலைமுறைகளுக்கு பொருத்தமானதாகவும் நிலைத்ததாகவும் தொடர முடியும்.

## இன்றைய சமூகத்தில் பண்பாட்டு ஆய்வுகளின் அவசியம்

பண்பாடுகள் பற்றி ஆய்வுகள் சமூகத்தின் மாற்றப் போக்குகளை புரிந்து கொள்ளவும் , அதன் அடையாளங்களை பாதுகாக்கவும் மிக அவசியமானதாகின்றன . இவை சமூகத்தின் வரலாற்று நினைவுகளை பதிவு செய்யும் முக்கியமான அறிவியல் முயற்சியாக விளங்குகின்றன. மொழி, கலை, சடங்குகள்,மரபுகள் மற்றும் வாழ்வியல் நடைமுறைகள் போன்றவை ஒரு சமூகத்தின் தனித்துவத்தை உருவாக்குகின்றன . இவற்றை ஆய்வு செய்வதன் மூலம் சமூக மாற்றங்களின் தாக்கம் எவ்வாறு பண்பாட்டை மாற்றுகிறது என்பதையும் ,எவை நிலைத்திருக்கின்றன என்பதையும் தெளிவாக அறிய உதவுகிறது . பண்பாடுகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்வது சமூக மோதல்களை குறைத்து , பண்பாட்டு பன்முகத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை வளர்க்கிறது.எனவே, இன்றைய சமூக த்தில் பண்பாடுகள் பற்றிய ஆய்வுகள் சமூக வளர்ச்சிக்கும் பண்பாட்டு நிலைத்தன்மைக்கும் அடிப்படை ஆதாரமாக அமைகின்றன.

## முடிவுரை

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையையும் ,மதிப்பீடுகளையும், அடையாளத்தையும் உருவாக்கும் அடிப்படை அம்சமாகும். மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பண்பாடு தொடர்ந்து வெளிப்பட்டு வருகிறது இவை சமூக ஒற்றுமையையும் , தலைமுறை தொடர்ச்சியையும் உறுதிப்படுத்துகின்றன. இன்றைய காலச் சூழலில் உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சமூக மாற்றங்கள் காரணமாக பண்பாடுகள் பல்வேறு மாற்றங்களை சந்தித்து வருகின்றன. சில மரபுகள் மங்கிப் போகும் நிலையில் இருக்கின்றன . அதே வேளையில்,சில புதிய பண்பாட்டு வடிவங்கள் உருவாகின்றன. இந்நிலையில், பண்பாட்டின் அடிப்படை மதிப்புகளை காக்கும் பொறுப்பு சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் உண்டு . பண்பாடு இளைய தலைமுறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். இளைஞர்கள் தங்கள் பண்பாட்டை அறிந்து மதிக்கும் போது தான் தங்களின் சமூக அடையாளத்தையும் பொறுப்புணர்வையும் உணர முடியும் .**கல்வி வழியாக பண்பாட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் போது ,பண்பாடு ஒரு பாட பொருளாக மட்டுமல்லாமல் வாழ்வியலின் ஒரு பகுதியாக மாறுகிறது**. ஆகையால்,மாற்றங்களை ஏற்றுக் கொள்வதோடு, மரபுகளின் மதிப்பையும் பொருளையும் காக்கும் சமநிலை மிக அவசியமாகிறது.இவ்வாறு சமூகம் முழுவதும் ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது,பண்பாடு காலத்திற்கு ஏற்ற வகையில் வளர்ந்து ,எதிர்கால தலைமுறைக்கு ம் அர்த்தமுள்ள பாரம்பரியமாக தொடரும்.

## மேற்கோள் நூல்கள்


1. **பேரா. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.**
2. இராசமாணிக்கனார்.மா., தமிழர் பண்பாடும் நாகரிகமும், பாரி நிலையம், சென்னை.
3. பேரா.சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.



http://Creativecommons.org//license/by/4.0/.